**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.735/2023**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : குணசேகரன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : பெரியகருப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(26.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது சாரிபுதுக்கோட்டையில் குடியிருந்து வருகின்றேன். நான் ஆட்டோ மொபைல் கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 20.08.2023ம் தேதி மாலை சுமார் 6 மணி முதல் 7 மணியளவில் எங்கள் ஊரில் திருவிழா நடைபெற்றது. நானும் எனது அண்ணன் கோபால கிருஷ்ணனும் பாட்டம் என்ற ஊருக்கு விஷேசத்திற்கு போய் விட்டு ஊருக்கு வந்துகொண்டிருந்தோம். அப்போது காஞ்சிரங்குளம் என்ற ஊரில் வைத்து முகிலன், விக்கி, விஷ்வா, சோனை, கமல் ஆகியோர்கள் எங்களை வழிமறித்து என்னையும் எனது அண்ணனையும் வாலால் எனது வலதுபுற கன்னத்தில் வெட்டிவிட்டு எனது கழுத்தில் போட்டிருந்த செயினை அத்துவிட்டு ஓடிவிட்டார்கள். **அசல் ஆவணங்கள் வழக்கு கோப்பில் இல்லாததால் அசல் ஆவணங்களை போலிசார் ஆஜர்படுத்த வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.